இணையதள அறிவிக்கை

ந.க.அ1/1087/2019

நாள்: 19.11.2019

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, தமிழ்நாடு
திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியம்
சிவகங்கை மாவட்டம்

## அலுவலக உதவியாளர் காலிப்பணியிடங்களுக்கு நேரடி நியமன அறிவிக்கை (Notification)

சிவகங்கை மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலகு, அரசுத் துறையில் காலியாக உள்ள 3 (மூன்று) அலுவலக உதவியாளர் பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் நிரப்பிட கீழ்க்கண்ட விபரப்படி இனசுழற்சி மற்றும் இட ஒதுக்கீடு, தகுதிவாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**அலுவலக உதவியாளர் - மூன்று காலிப்பணியிடம்**

| வ.எண் | பதவியின் பெயர் | காலிப்பணியிட எண்ணிக்கை | இன சுழற்சி (Rotation) | இட ஒதுக்கீடு |
|---|---|---|---|---|
| 1 | அலுவலக உதவியாளர் | 3 (மூன்று) | பொதுப்போட்டி(முன்னுரிமை) (General Turn)(Priority) | - |
| 2 | | | ஆதி திராவிடர் முன்னுரிமை அடிப்படையில் அருந்ததியர் [Schedule Caste (Arunthathiyars on Preferential Basis)](Priority) | பெண் (ஆதரவற்ற விதவை) Women (Destitue Widow) |
| 3 | | | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் (முன்னுரிமை) [Most Backward Classes and denotified Communities] (Priority) | - |

**கல்வித் தகுதி** - அலுவலக உதவியாளர் பணியிடத்திற்கு 8-ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.
**சிறப்புத் தகுதி** - மிதி வண்டி ஓட்டத் தெரிந்தவராக இருக்க வேண்டும்.

| இனம் | வயது |
|---|---|
| பொதுப்பிரிவினர் | விண்ணப்பிக்கும் நாளன்று 18 வயது பூர்த்தி அடைந்தும் 01.07.2019 அன்று 30 வயதிற்கு மிகாமல் இருக்க வேண்டும் |
| மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்/ பிற்படுத்தப்பட்டோர் | விண்ணப்பிக்கும் நாளன்று 18 வயது பூர்த்தி அடைந்தும் 01.07.2019 அன்று 32 வயதிற்கு மிகாமல் இருக்க வேண்டும் |
| ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் | விண்ணப்பிக்கும் நாளன்று 18 வயது பூர்த்தி அடைந்தும் 01.07.2019 அன்று 35 வயதிற்கு மிகாமல் இருக்க வேண்டும் |

Scanned by CamScanner

- அலுவலக உதவியாளர் பணிக்கு ஊதிய கட்டு ரூ.15700-50000(நிலை-1) ஊதியம் நிர்ணயம் மற்றும் இதர படிகள்.
- **விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:**

ஆணையாளர் / வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ),
ஊராட்சி ஒன்றியம்,
திருப்பத்தூர் - 630 211 சிவகங்கை மாவட்டம்.

**நிபந்தனைகள் :**

1. சிவகங்கை மாவட்டத்தில் வசிப்பவராக இருக்க வேண்டும். திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்டவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
2. விண்ணப்பதாரர்கள் தங்களது கல்வித் தகுதி, இருப்பிடம் (ரேசன் கார்டு மற்றும் ஆதார் கார்டு), சாதிச்சான்று, முன்னுரிமை சான்று, இதர சான்றிதழ் நகல்களை சான்றொப்பம் பெற்று விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.
3. இன சுழற்சி, வயது மற்றும் கல்வித் தகுதியற்ற நபர்களிடமிருந்து வரப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
4. விண்ணப்பதாரர்கள் அளித்த தகவல்கள் தவறு என பரிசீலனையில் கண்டறியப்பட்டால் அவரது விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்படும்.
5. நேர்காணல் மற்றும் சான்றிதழ் சரிபார்ப்பில் கலந்து கொள்வதற்கு பயணப்படி ஏதும் வழங்கப்படமாட்டாது.
6. தகுதியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு நேர்முகத் தேர்வு நடைபெறும் இடம் மற்றும் தேதி குறித்து நேர்காணல் கடிதம் (Call Letter) அனுப்பி வைக்கப்படும்.
7. விண்ணப்பங்கள் உரிய சான்றுகளின் நகல்களுடன் திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் அவர்களிடம் நேரிலோ அல்லது பதிவஞ்சல் மூலமாகவோ 02.12.2019 தேதியன்று பிற்பகல் 5.45 மணிக்குள் அனுப்பி வைக்க வேண்டும். காலம் கடந்து பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
8. ஒவ்வொரு காலிப் பணியிடத்திற்கும் தனித் தனியாக விண்ணப்பிக்க வேண்டும்.
9. நியமனத்தை இரத்து செய்வதற்கான அனைத்து அதிகாரமும் ஊராட்சி ஒன்றிய ஆணையாளருக்கு உண்டு.

அலுவலக உதவியாளர் விபரங்கள் விண்ணப்ப படிவம் திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திலும் மற்றும் சிவகங்கை மாவட்ட இணையதளம் www.sivaganga.nic.in என்ற இணையதளத்திலும் வெளியிடப்பட்டுள்ளது.

ஆணையாளர்,
ஊராட்சி ஒன்றியம்,
திருப்பத்தூர்.

Scanned by CamScanner
Scanned by CamScanner